ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/13 - 2020 මාර්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2020.03.03

*2165/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

3 ஆவது திருத்தம்

2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிய, 2153/6 ஆம் இலக்க மற்றும் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 2141/73 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதிய 1925/37 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பந்தி இலக்கம் 7.3.2.3.1, 7.3.2.5 (ii) மற்றும் 7.3.2.5 (iii) இன் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

2020, பெப்புருவரி 28.

1A - G 32136— 20 (2020/03)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| பந்தி இலக்கம் | உத்தேச திருத்தம் |
|---|---|
| 7.3.2.3.1 | விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு அல்லது அதற்கு முன் மேலே 7.3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய அரசாங்க சேவைக்குரிய அல்லது மாகாண அரசாங்க சேவைக்குரிய இலங்கை அதிபர் சேவையில், இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையில் அல்லது பிரிவெனா ஆசிரியர் பதவியில் நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத செயலுக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 7.3.2.5 (ii) | இலங்கை கல்வி நிர்வாக சேவையில் அல்லது இலங்கை அதிபர் சேவையில் அல்லது அரசாங்க சேவைக்கு அல்லது மாகாண அரசாங்க சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது பிரிவெனா ஆசிரியர் பதவியில் நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தரொருவராக இருத்தல். |
| 7.3.2.5 (iii) | இலங்கை கல்வி நிர்வாக சேவையில் அல்லது இலங்கை அதிபர் சேவையில் அல்லது அரசாங்க சேவைக்குரிய அல்லது மாகாண அரசாங்க சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது பிரிவெனா ஆசிரியர் பதவியில் உடன் முன்னரான ஐந்து வருட காலப்பகுதியில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உரிய திகதிக்கு உழைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், அக்காலப் பிரிவில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தலும் வேண்டும். |

*03-718*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.